ஸ்ரீ ஆண்டவிநாயகர் துணை.

# குணநிதி.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக "—திருக்குறள்.

(All Rights Reserved.)

மலர் 1 } இரக்தாக்ஷி-௵ ஐப்பிசி-௴ ௧௳ / 1924-௵ அக்டோபர்-௴ 17௳ { இதழ் 5.

திருச்சிற்றம்பலம்.

" உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரியாய் போன்னம்பலத்தேம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே."

---

## கலைமகள் துதி.

(ஆறுமுக வடிவேலவனே என்ற மெட்டு)

வள்ளச் செழுங்கம லத்துறை நான்முகன்
வாக்கி லுறைந்திடுவாள்—தன்னை
உள்ளு மடியவ ருள்ளத்தி லேகவி
யூற்றம் பெருக்கிடுவாள். (1)
வெள்ளைக் கலையை யுடுத்தொரு கையினில்
வீணையுந் தாங்கிடுவாள்—நெஞ்சைக்
கொள்ளை கொள்ளும்வேத சாத்திர மோர்கையிற்
கொண்டு விளங்கிடுவாள். (2)
செந்தமி ழாரிய மாகுமெ ழின்மலர்ச்
செங்கணி ரண்டுடையாள்—என்றும்
அந்தமு மாதியு மற்று விளங்கெழி
லானந்த மெய்யுடையாள். (3)

வேதசி வாகம மாதிய நூல்கள்
விரிக்கும் புகழுடையாள்—உயர்
போதத்தி னாலே தெளிந்தமெய் ஞானியர்
போற்றுந் திறலுடையாள். (4)

சாற்றுங் கலைக ளறுபத்து நான்கையுந்
தந்து மகிழ்ந்திடுவாள்—பதம்
போற்றிடுங் கல்லுங் கவிசொலும் பான்மை
பொருந்த வருள்புரிவாள். (5)

பங்கயன் மாலர னாதிய தேவர்
பணியும் பதமுடையாள்—தினம்
சங்கை யில்லாமல் வணங்கிடு வார்பவத்
தாபந் தவிர்த்திடுவாள். (6)

மேவிய சிந்தை மயக்க மறுத்துயர்
மெய்ப்பொருள் தந்திடுவாள்—எந்தன்
ஆவி யுடல்பொருள் யாவையுங் கொண்டெனை
ஆதரித் தின்புறுவாள். (7)

வேதத்தி னுட்பொரு ளாக விளங்கிடும்
வெள்ளிதழ்த் தாமரையாள்—அவள்
பாதக் கமலம் பணிந்திடு வார்க்குயர்
பல்கலை தந்திடுவாள். (8)

அம்புவி மீதுயிர் ஞானக் கதிரொளி
தந்தெனை யாதரிப்பாள்—அவள்
செம்பது மப்பதம் வாழ்க வெனத்துதி
செப்புவ தென்செயலே. (9)

எப்பத முந்தரு வாள்புவி மீதி
லிரும்புகழ் தந்திடுவாள்—தினம்
துப்பிதழ் வெண்ணிறத் தோகை பதங்கள்
துதித்து மகிழ்பவர்க்கே. (10)

சொல்லருந் தூய "குணநிதி" தந்துயர்
தொல்புவி யின்புறவே—மிகப்
பல்லருந் தூய கலைகள் விரித்திடும்
பாவை பதஞ்சரணே. (11)

அன்பன்.

# நமது நாடு.

நமது நாடு இதுபோழ்து, எந்நிலையிலிருக்கிறது? பூர்வகாலத்து நம்மவர் எவ்விதவாழ்க்கையைநடாத்திவந்தார்கள்? அன்னாருக்கிருந்த கௌரவத்தில் எவ்வளவுவரை நம்மவர் உடைத்தாயிருக்கின்றனர்? பண்டைக்காலத்து வாழ்வினும் இக்காலத்தில் நம்மவரது வாழ்க்கை எத்தனைமடங்கு எதில் விருத்தி உற்றிருக்கிறது? இவ்வினாக்களுக்கு முறையே வெகு எளிதில் எவரும் விடை அளித்து விடுவார்கள். அதாவது, நம்மவரது வாழ்க்கை மிக வெட்கக்கேடான நிலையிலிருந்து வருகிறதென்பதே!

இது வன்றியும், நமது நாட்டின் பழமையை நம்மவரிற் பலர் அறியாராகி, நாட்டின் நிலைமை எவ்விதமாறினும், அதை உணராது கண்மூடித்தனமாகவேகாலங்கழித்து வருகின்றனர். மேலும், சிலர் நமது நாடு மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறதென்றும், தாம் தமது வாழ்க்கையில் உண்மை நாகரிகம் முன்னிலும் அதிகம் பெற்று விளங்குகிறதாகவும் தேசமும் சுபிக்ஷம் அடைந்திருக்கின்றதென்றும் கூறுவர். இக்கூற்று எதுவரை உண்மையாம் என்பதைப்பற்றி சிறிது ஆராய்வாம்.

இனி, ஒருநாடு சுபிக்ஷநிலையிலிருக்கிறதென்றால், அந்நாட்டிலுள்ளோர் அனைவரும் கவலையின்றி, நிரம்ப சுகமுடையவர்களாய் வாழ்ந்து வருகின்றனர் எனல் வேண்டும். நமது நாடு மேற்கூறிய பதவியில் இருக்கின்றதா? எனில், மிகவும் பரிதாபகரமான நிலையிலே சுழன்று கொண்டிருக்கிறதென்பது யாவரும் உணர்ந்ததே. நம் தாய்நாடு இந்நிலைக்கு வருவதற்குக் காரணம் என்னவெனில்? மனிதவாழ்க்கைக்கு முக்கியமானவை உணவு, உடை, இருப்பிடம் முதலிய வசதிகளேயாம். இம்மூன்றும் எவ்விடத்தில் குறைவற்றுக் கிடைக்கின்றதோ, அந்நாடு க்ஷேம நிலையில் இருக்கின்றதென்றே கூறலாகும். இனி, இவை யாவும் நம் நாட்டில் உள்ளனவா என நோக்குங்கால், உணவுக்கு

வேண்டிய பொருள்கள் யாவும் நம் நாட்டிலுள்ளன வென்பதற்கும், அதற்குப் போதுமான உரம் அமைந்த நிலங்களுள்ளன வென்பதற்கும் சிறிதும் ஐயமில்லை. உணவுக்குரிய பொருள்களை உற்பத்திசெய்வதற்கான கால் நடைகளும் நிறைந்துள்ளன. ஆதியில், ஆரியர்கள் ஆடுமாடுகளை ஆங்காங்கு ஓட்டி வளர்த்து வாழ்ந்து வந்தார்களென்பது நம் தேசசரித்திரங்கள் கூறுகின்றன.

ஆடைக்குரிய பருத்தி, பட்டு, கம்பளி முதலியவைகளும் இங்கு ஏராளமாயுள்ளன. ஒரு காலத்தில், டக்காமஸ்லீன் பிரசித்தி பெற்றனவாயிருந்ததென நாம் கூறவேண்டுவதில்லை. காஷ்மீரத்துச் சால்வை ஒன்று லக்ஷக்கணக்கான பெருந்தொகை மதிக்கப் பெற்றதென்பது, இங்கு குறிப்பிடத்தக்கது.

மூன்றாவதாகக்கூறிய, வாசஸ்தானத்திற்கேற்ற சமவெளிப்பிரதேசங்களும், கோடைக்காலத்திற்குத் தக்க மலைநாடுகளும் நம்நாடு உடையனவே. இவ்வாறிருக்க, உணவுக்கு வேண்டிய பொருள்கள் யாவும், நமக்கு வெகு எளிதாயும், மலிவாயும் கிடைக்கின்றதா? உடைக்கு அந்நிய நாட்டை எதிர்பார்க்க வேண்டுவதவசியந்தானா? பண்டைக்காலத்து நன்னிலைமையிலிருந்த நம் தாய்நாடு தவித்தற் கேதுவான காரணமென்னை? இந்திய நன் நாடு கடல் கொண்டு மற்றோர் நாடு உண்டாயிருக்கிறதா? மழை பெய்வதில்லையா?

நிற்க, நம் நாட்டின் க்ஷேமத்தைக் கருதி, மேற்கூறிய வற்றைப்பற்றி யோசிக்கையில், (1) ஏற்றுமதி இறக்குமதி (2) உழவுத்தொழில் (3) நெசவுத்தொழில் (4) பண்டமாற்று (5) அந்நியநாட்டுப் பொருள். நாகரிகம் முதலியவற்றில் மோகம் (6) கட்டாயக் கல்வி முதலியவைகளைச் சரிவரநன்கு உற்று நோக்கல் வேண்டும்.

(1) இங்கு, ஏற்றுமதி இறக்குமதி விஷயத்தைப் பற்றி ஓர் திருஷ்டாந்தம். நாம் இந்நாட்டிலிருந்து ஐந்து லக்ஷம்ரூபாய் பொறுமான பொருளை வெளி நாட்டிற்கு அனுப்புகிறோம் என்று வைத்துக்கொள்வோம். பின், அப்பொருள் எங்குச் செல்லு

கின்றது? அந்நாட்டிலேயே அது உபயோகப்படுத்தப்படுகின்றனவா? இல்லை, மீண்டும் அப்பொருளையே மாற்றி நமது நாட்டிற்கு இருபத்தைந்து லக்ஷரூபாய் விலைபிட்டு அனுப்பப்படுகின்றது. இதனால், நமக்கு இருபது லக்ஷரூபாய் நஷ்டமல்லவா?

(2) உணவுப் பொருள்களில் சிலவற்றைக்கூட அந்நிய நாட்டை எதிர்பார்ப்பது எவரும் நன்குணர்ந்ததே! நவதானியங்கள் வெளிநாட்டிலிருந்தே வரவழைக்கப்படுகின்றன. அன்றியும், சொற்பவருமானத்தை நாடி நெல் முதலிய உணவுப்பொருள்களை ஏற்றுமதி செய்துப்பின், அதனால் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

(3) அந்நிய நாட்டு உடைகளைக் கட்டிக் கொண்டிருப்பதே, இதற்குப் போதிய சான்றாகும். இதனால், அந்நிய நாட்டார் ஏராளமான ஊதியத்தைப் பெறுகின்றனர். பூர்வீகத்தில் உடைகளை நம்மவர்களே உற்பத்தி செய்து வந்திருக்கிறார்கள் என்பதற்குச் சாதனமான கருவிகள் ஒவ்வொருகுடும்பங்களிலும் இருந்தும் வருகின்றன. மேலும், பலமதஸ்தர்களும் தங்கள் தங்களது பாஷையில் மொழிபெயர்த்துக் கொண்டாடி வருவதான "திருக்குறள்" என்னும் அரிய நூலையியற்றியாகிய திருவள்ளுவ நாயனாரும் நூல் நூற்று வந்திருக்கிறாரென்பது எவரும் உணர்ந்ததாகும். இது பற்றியே நம் நாட்டிலும் இதுபோழ்து கதர் இயக்கமென ஓர் நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது.

(4) பண்டமாற்றுதல், ஆதிகாலத்து இருந்தது. எப்பொருளையும் பணங்கொடுத்துப் பெறல் வேண்டியதாயிற்று. இதனால், விளையும் தீமையோ பலவாம். பணமிருந்தாற் போதாதா என்பது அறியாமை. பணம் எவற்றையும் செய்து விடுமா? பண்டம் அகப்படாதபோது பணம் யாதுசெய்யும்? இப்பண்டமாற்றுதலால், பணத்திற்குள்ள மதிப்புக் குறைந்து, விலையும் குறையஏதுவாகும். இதை விரிக்கிற் பெருகும்.

(5) அவசியமில்லாதது நம்மவருக்குத் தீங்கையேதரும். அந்நிய நாட்டுப் பொருள்கள் யாவையும் விலக்குதல் வேண்டும்.

இதில் காபி, டீ, கோகோ, மோட்டார், பைசைகிள், வாசனைத் திரவியங்கள், மண்ணெண்ணெ முதலியவைகளும் சேரும். இதனால் அளவற்ற பொருள்களையும் மேல்நாட்டாரால் கொள்ளை கொள்ளப்படுகின்றன.

(6) கல்வி, மற்றைய யாவற்றிற்கும் ஆதாரமாம். மேற்கூறியயாவும் கல்வியிருந்தால் செவ்வனே நடைபெற்றே வந்திருக்கும், உண்மைக் கல்வி வேண்டும். தற்போதைய கல்வி நிலையை முற்றிலும் மாற்ற வேண்டுவது அவசியமாகும். மதக்கல்வி, தொழிற் கல்வி, விவசாயக் கல்வி முதலியவை கட்டாயப்பாடமாக ஏற்படுத்தல் வேண்டும். இதனால், பெரும்பயன் அடையலாகும்.

நேயர்காள்!! மேற்கூறியவைகளை நன்கு ஆராய்ந்து நடப்பதே, நமது நாடு முன்னேற்றம் அடைந்து, அடிமைத் தனத்தில் நின்று நீங்கி, சுகமுற ஏதுவான நெறியாகும். இனியேனும் உறங்காது நம் மூதாதையோர் கொண்டிருந்த கொள்கைகளைத் தழுவி நமது நாட்டின் முன்னேற்றத்தைத் தேடுவது நமது கடமைகளுள் முக்கியமானதாகும் என்பது கூறவும் வேண்டுமோ? ஆகையால், இத்தகைய நமது கடமையை நாம் ஒவ்வொருவரும் நிறைவேற்றி இன்புறும் வண்ணம் இறைவன் அருள் புரிவாராக.

சுபம்!

---

## காழிக் கல்வெட்டுக்கள்.

(80-வது பக்கத்தொடர்ச்சி.)

### சாஸனங்களின் முக்கியம்

சாசனங்களுள் தான சாஸனங்கள் தாம் மிகுந்தவை. தாதாக்களாவார் மஹாராஜாக்கள், பிரதிநிதிகள், பெரிய உத்தியோகஸ்தர்களே. அவ்வள்ளல்கள் அரசர்களாயின் அவர்கள் வமசத்தைச் அச்சாஸனங்கள் குறித்திருக்கிறபடியாலும், கொடை

யாளிகள்தேசப்பிரதிநிதிகள்உத்தியோகஸ்தர்களாயிருப்பின்தங்கள் நிலைமையையும் தங்கள் ஆக்கினைக்குக் கீழ்ப்பட்ட தேசஎல்லைகளையும், தாங்கள் எந்த அரசின்கீழ் அம்மேன்மை வகித்தார்களோ அவ்வரசின் பெயரையும் அச்சாஸனங்களில் சொல்லியிருக்கிறபடியாலும் தேசசரித்திரத்தைக் கோடிகரித்து எழுத இவைகள் தகுந்த எல்லைக் கற்களாக அமைந்து நமது நாட்டின்மட்டும் அன்றி, நேபாளம், ஆப்கனிஸ்தானம், பர்மா, மத்திய ஆசியா, இலங்கை முதலிய விடங்களிலும் பரந்துகிடக்கின்றன. கி. பி. 604லும் அதன்பின்னும் வரைந்த சாஸனங்கள் கம்போடியாவிலும் ஜாவாதீவிலும் கி. பி. 732முதல் 1573வரையிலுள்ள சம்ஸ்கிருத திராவிட சாஸனங்கள் ஜாவாவிலும் கிடைப்பன.

சில சாஸனங்கள் பிரசித்த ராஜர் அரசாண்ட வருஷங்களையும், சில கி. மு. 3102ல் ஆரம்பித்த கலியாப்த வருஷங்களையும், மற்றவை வேறு வேறு அப்தங்களையும் (1) கி.மு. 58ல் கனிஷ்காவில் ஏற்பட்ட விக்ரமாப்தம், (2) கி. பி. 78ல் தொடங்கிய சாலிவாகன சகாப்தம், (3) கி. பி. 605-6ல் ஆரம்பிக்கும் ஹர்ஷாப்தம், (4) கி. பி. 249ல் தொடங்கும் காலசூரி சேதி அப்தம், (5) கி. பி. 825லிருந்து கணக்கிடப்படும் கொல்லம் ஆண்டு, (6) கி. பி. 879ம் வருஷத்திய நீவாரப்தங்கள், (7) கி. மு. 3076ம் வருஷத்திய காஷ்மீர தேசத்தின் சப்தரிஷ்யப்தம்) குறிப்பதால், இவைகால நிர்த்தாரணஞ் செய்தற்குத் தக்க பிரமாணம் ஆகும்.

## பொது நிரீக்ஷணங்கள்.

சில போலி நாணயங்களுளவாறு, சில போலிச் சாஸனங்கள் மெய்யிலவாய்க் கபடமாய்ப் பின்னர் ஏற்பட்டனவாய், உடையாரல்லார் கையொப்பமிட்டனவாய், முன்தேதிபின்தேதி தீட்டப் பெற்றனவாயுள. உண்மையானவற்றையும் கிருத்திரிமமானவற்றையும் விவேகித்துப் பாகுபாடு செய்து விசாரதர் ஆராயப் புகவேண்டும்.

சாஸனச் சுரங்கங்களிலிருந்து சுவல்பபாகம் தான் வெளிக்கு வந்திருக்கிறது. உத்தர தேசத்தில் அரிய பெரிய குப்த மன்னர்கள் அரசுரிமைபூண்டு ஓங்கிநீதி நெறி பிறழாது தழைத்த காலமாகிய கி. பி. 320க்கு முற்காலத்தை மைசூர்தேசச் சாசனங்களையும் இனி நமக்கு அகப்படக்கூடிய இதர சாஸனங்களையுங் கொண்டு தான் அறிய வேண்டும். ஆதலால் சாஸன ஆராய்ச்சிகளின் பரிமாணங்களை நாம் ஆர்வத்துடனும் ஆவலுடனும் எதிர் பார்க்கிறோம். சோழவரசரது பல சாசனங்களும் பிரதி செய்யப் பெற்று அவர்களின் மெய்க்கீர்த்திகளின் உதவியால் பல பெரியார் எழுதிய அச்சோள அதி ராஜ்யத்தின் சரித்திரம் இத்தமிழகத்திற்கு பெரும்பயனை விளைக்கின்றது. இம்மட்டும் சாசனங்களின் பொதுக்குறிப்புச் சிலவற்றைக்கூறி இனிக் காழிச் சாசனங்களின் (2) பொதுக் குறிப்பையும், (3) சிறப்புக் குறிப்பையும் கவனிப்பாம்,

(தொடரும்)

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை.

---

தமிழணங்கின்

## சீர்குன்றக் காரணமென்ன?

(82ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்பொழுது சம்ஸ்கிருதபாஷை கீழ்வகுப்பில் ஆரம்பித்து அதனாலுண்டாகும் பலனைப்பற்றி திருக்காட்டுப்பள்ளி நடுத்தர கலாசாலைத் தலைமை உபாத்தியாயர் திருவன்குரு சுவாமிசாஸ்திரிகள் சில நாளைக்குமுன் மாயூரத்திற் பொதுக் கூட்டமொன்றில் பேசும்போது தங்கள் கலாசாலையில் முதலாவது பாரத்தில் இந்தப்பாஷையை ஆரம்பித்ததாயும், பின்னர் மேல் வகுப்புக்கு ஏற ஏற பையன் வியாசமெழுதுவதைத் திருத்துவது மிக்கக் கஷ்டமாயிற்றென்றும், இந்த அனுபோகத்தின் பின்

னர் இரண்டாவது பாரத்திலிருந்து சம்ஸ்கிருதமாரம்பிக்கிற தென்று தீர்மானித்திருக்கிறதென்றும், அதில் கொஞ்சம் சௌகரிய மேற்படுகிறதென்றும் சொன்னார்கள். இவர்கள் இருக்கும் கலாசாலை நமது ஜில்லாவில் பெரிய மிராசுதார்களிலொருவரும் பல பெரிய உத்தியோகங்களை அரசாங்கத்தில் வகித்துப் பேர்பெற்றவருமான சர். P. S. சிவசுவாமிஐயரவர்கள் விசாரணைக்குட்பட்டது. ஊரும் பிராமணர்கள் கூடிய இடம். அங்கேயே தேசபாஷை மாணவர்களுக்கு ஒரு அளவு வேண்டுமென்பது புலப்படுமாயின், மற்றைய இடங்களைப்பற்றி பேசுவானேன். இது இவ்வாருகப் பண்டிதரிலொருவர் கீழ் ஐந்தாவது வகுப்பிலேயே சம்ஸ்கிருதம் ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னாராம். அதுவும் உபாத்தியாயர் கூட்டத்தில் ஆலோசனைக்கு வந்திருக்கிறது. இவ்விதமான பயனற்ற கெடுநியைத் தரத்தக்க யோசனைகளாலேயேஇத்தேசபாஷைமலினமடையக் காரணமாகிற தென்பதிற்றடையென்ன? இவைகள் அரசாங்கத்தார் அறியவழியில்லை. இவைகளையறிந்த பல பெரியாரும்மௌனஞ் சாதிக்கின்றனர்.

இனி வியாசமும் மொழிபெயர்ப்பும் கட்டாயபாடமாகக் கருதப்படுகிறதென்றேம். இவைகளில் வியாசம் சிலகலாசாலைகளில் தமிழ்ப் பண்டிதர்கள் வசமும் சில கலாசாலைகளில் பி. ஏ. பட்டதாரிகள் வசமும் இருக்கின்றன. இவர்களுள் பண்டிதர்கள் வசமிருக்கிற விடத்தில் மாணவர்கள் ஒருசுமாராக பிழையின்றி எழுதப்பழகியிருப்பார்கள். பி. ஏ. பட்டதாரிகளுக்குத் தமிழ் தெரியாதவர்களென்று சொல்லவரவில்லை. 'உலகத்தில் சோதிடமும் வைத்தியமும் அறியாதவனில்லை' என்று ஒரு பழமொழியுண்டு. அதுபோலத்தமிழும் தெரியாத தென்னாட்டார் இல்லை என்றே சொல்லலாம். ஆனால் தகுதியான சொற்களை உபயோகிக்க அறிவார்களா என்பது தான் ஈண்டுக் கவனிக்க வேண்டியது. அப்படித்தெரியாதவர்கள் இருப்பதாகவேவைத்துக்கொள்வோம். இவர்கள் எவ்வாறு பரீட்சையில் தேர்ச்சியடைகின்றனர் என்ற வினு எழலாம். அங்கே தான் அதன் சூழ்ச்சி இருக்கிறது. மாணவர்கள் எழுதும் விடைப்பத்திரங்

களைத் திருத்தி அதற்குரிய தகுதி எண்களைக் (Marks) குறிப்போரான பரீட்சாதிகாரி பரிசோதகர் யாவர் என்ற வினவை எழுப்பிவிடையைத் தெரிந்து கொள்ளலாம். ஆகையால்எல்லோரும் ஓரே விதமாக விருக்கும்போது அதனிற் குறையேது. இனி மொழிபெயர்ப்பை எடுத்துக் கொண்டாலோ சொல்லவேவேண்டுவதில்லை. ஆங்கிலம் தெரிந்த தமிழ்ப் பண்டிதர்கள் இந்தப் பூபாகத்தில் ஒரு சிறிதளவினரே. அவர்கட்குப் போதிக்கும் உரிமையில்லையாகவே திருத்தும் உரிமையும் இல்லையாகின்றது. அதன் கதி சொல்லவேண்டியதில்லை. ஆகவேதமிழின்சீர்குன்றப் பாதிதென்னிந்தியமக்களும் பாதி துரைத்தனதாருமென்றே கூறலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்லலாம். இவ்வளவுக்கும் தமிழைக்கற்றோர்,

"அடகெடுவாய் பலதொழிலுமிருக்கக்கல்வி அதிகமென்றே கற்றுவிட்டோம்" என்று நினைத்துவாயை மூடிக்கொண்டிருப்பதேயாகும்.

இலக்கண விளக்க பரம்பரை
திருவாரூர். சோமசுந்தரதேசிகர்.

---

## பாஷை.

(87-வது பக்கத்தொடர்ச்சி)

---

இவ்வாறு மனிதன், விலங்கு, பறவை முதலிய உயிர்களனைத்தும் சத்தத்தால் தெரிவிக்கும் பாஷையாகிய சொல்லுக்கு முதற் காரணமாக விருப்பது, பிராணிகளின் இயற்கைக்கு மாறுபடாத நாவின் முயற்சியாலுண்டாகும் சிற்றொலிக் கூட்டங்களின் செயற்கையேயாகும். இதையே பவணந்தி முனிவர்

"மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி"

என்றார். ஓசையானது செவிப்புலன் ஒன்றினாலேயே உணரக்கூடியதாகும். இத்தகைய ஒலிக்கூட்டத்தின் காரியமாகிய

சொல்லும், நேருக்கு நேராயிருந்து கேட்டாலொழிய உணரும் பான்மை யுடைத்தன்று. மேலும் மிகப்பரந்த உலகின்கண் வாழவேண்டிய வுயிர்கள், எப்பொழுதும் நேருக்கு நேரே யிருந்து தெரிவிப்பதும், தெரிந்து கொள்ளுவதும் அசாத்யமென்பது கருதியே ஆன்றோர்கள் அவ்வொலி வடிவாகிய சொல்லுக்கு ஓர் வரிவடிவை உண்டு பண்ணலானார்கள். இவ்விடத்தில் தான் மனிதன் தன்னுடைய பகுத்தறிவைக் கையாள விலங்கு, பறவை முதலியவைகள் தங்களுக் கேற்பட்ட ஐயறிவோடு நின்று பின்னடைந்து விட்டது.

மனிதர்கள் ஒலிக்கு ஒரு வடிமைக்குங்கால், அவ்வவ் வினத்திற்கேற்ப தங்கள் ஒலிமாறுபாட்டின்படி வெவ்வேறு உருவமமைத்துக்கொண்டார்கள். ஒரு பாஷையின் ஒலியை வரிவடிவிற்காட்ட, இன்றியமையாத கருவியாக விருப்பது எழுத்துக்களாகும். இத்தகைய எழுத்துக்கள் தனித்தாகிலும், பல சேர்ந்தாகிலும் ஏதாவதோர் பொருளைத் தருமாயின் பதம் (சொல்) என்பார்கள்.

"எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற் பதமாம்,'' என்றனர் நன்னூலாரும். இத்தகைய பதங்கள் பல சேர்ந்து வாக்கியங்கள் உண்டாகியே பாஷைகள் வளர்ந்து வருகின்றன.

இப்படியே அந்தந்த நாட்டு நாகரிகத்துக்கேற்ப சொற்கள் பகுக்கப்பட்டும், இலக்கண வரம்புகளமைக்கப்பட்டும் பாஷைகள் அவ்வத் தேயத்தாரால் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஒரு நாடு, கைத்தொழில், வர்த்தகம், ஆட்சிமுறை, நாகரிகம் முதலிய வற்றில் எத்தகைச் சிறப்பு வாய்ந்திருக்கின்றதோ அவ்வளவே பாஷையும் மேன்மை யடைகின்றது. இன்னமும் எழுத்துக்களின்றியும், இலக்கண வரம்புகளின்றியும் பல பாஷைகள் வழங்குகின்றன. அன்னிய பாஷைகளிருந்தே தோன்றி வேண்டிய மாறுபாடுகளை யடைந்து தற்காலத்தில் மிக மேம்பாடடைந்தும், அனாதி காலந்தொட்டு எல்லா வகையிலும் சீர்பெற்று பிறமொழிகளின் ஆக்கம் இறையுமின்றித் தனித்து விளங்கித் தற்காலத்தில் பெருமை குறைந்தும் பல பாஷைகள் இருக்கின்றன.

இவ்வாறு தேசங்கள் தோறும் பல்வேறு பாஷைகள் வழங்கிவருகின்றன. இத்தகையபாஷைத்தொகுதிகளுள் நமது தாய்ப்பாஷையாகிய தமிழும் ஒன்றாகும். நமதருமைத் "தமிழ்" மொழியானது மிகப் பழமையும், சீரும், சிறப்பும் பெற்ற செம்மை மொழியாகும். இது எந்த பாஷையிலிருந்தும் தோன்றியதன்று. எப்பாஷையின் உதவியும் இதற்கு வேண்டியதில்லை. இது எப்பொழுதும் தனித்தியங்கு மாற்றலுடையது. இதனது தொன்மையை ஆராயின் கடலாழங்காண முயல்வதையே ஒக்கும்.

"சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழுகவியையும்
..............தெரிந் தளவிடக் கூடுமோ," என்றார் குருபாததாஸர். தமிழ் மொழியைப் பயின்ற தமிழ்ப்பாவலர் சொல்லும் தமிழ்க்கவியின் திறத்தையே அளவிடமுடியாதாகலின் இவ்வருந் தமிழின் தொன்மையும் மேன்மையும் யாரே அளவிடற்குரியர். இதனது தொன்மையை ஆராய்ந்தார் பலருள் "மொழிநூ" லாசிரியர், தமிழ்மொழி ஆரியத்துக்கும் முற்பட்டதென்பர். மேலும் "இராமாயண" காலத்திலும் "மகாபாரத" காலத்திலும், தமிழ் மொழியும் தமிழ்மன்னர்களு மிருந்ததாகச் சரித்திரவாயிலாக விளங்குகின்றது.

"வளவன்பதி முதலாக வயங்கும்பதி தோறுந்
துளவங்கம ழுதிசிதள தோயங்கள் படிந்தே
யிளவண்டமி ழெழுதேடுமு னெதிரேறிய துறைசூழ்
தளவங்கமழ் புறவஞ்செறி தண்கூடல் புகுந்தான்"
என்ற வில்லிபுத்தூர் ஆழ்வார்பாரதத்தினால் உணர்க.

அர்சுனன் தீர்த்தயாத்திரை சென்றபொழுது சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கியதாகவும், அன்னுளிற் பாண்டிய நாட்டை ஆண்ட வழுதியின்மகளை மணந்து பப்ருவாஹன் என்னும் மகவையுமீந்து பின்னாத்தேயத்தைவிட்டுச் சென்றதாகவும் மகாபாரதங்கூறுகின்றது. (தொடரும்)

E. K. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

# வெற்றிக்குரிய வழிகள்.

(91-வது பக்கத்தொடர்ச்சி.)

விஜயநகர இராஜ்யத்தைத் ஸ்தாபித்த உலக குரு ஸ்ரீ ஜத் வித்யாரண்ய சுவாமிகள் 200 (இருநூறு) வருடங்கள் வாழ்ந் திருந்ததாய் நம்பப்படுகின்றது. ஹம்பியிலுள்ள புவனேச்வரீ ஆலயத்தில் தன்னுடைய 75 (எழுபத்தைந்தாவது) வயதிலி ருந்து பன்னிரண்டு வருடகாலம் தபம் செய்த பின்பு சிருங் கேரிக்குச் சென்று உலக குருவாய் விளங்கினர். ஐந்து வரு டங்களுக்குப் பின் ஆனகோண்டி இராஜ்யத்து அரசர் இறந் ததைக்கேட்டு அங்குச் சென்று புக்க வம்சபரம்பரையை யேற் படுத்தி, 110 (நூற்றுபத்து) வருடகாலம் வரையில் அவர் களுக்கு மந்திரியாய் விளங்கினர்.

ஆதி சங்கராருக்குப்பின் சிருங்கேரி மடத்தில் ஸ்ரீ ஜத் சுரேச்வராசாரிய சுவாமிகள் 800 (எண்ணூறு) வருடத்திற் கதிகமாய் வாழ்ந்திருப்பதாய்த் தெரியவருகின்றது. உதயபூர் சமஸ்தானத்தில் சதுர்க்கோட்டை என்ற ஊரில் ஒருவரை 170 (நூற்று எழுபது) வயதில் தாம் கண்டதாக கர்னல் டாட் என் பவர் தாம் எழுதிய நூலொன்றில் கூறியிருக்கிறார். புசண்ட மகரிஷி பிரளய காலத்திற்குப் பின்னும் இருந்ததாக நூல்கள் முறையிடுகின்றன. கிருஸ்தவர்களுடைய வேதநூலில் ஆடம் என்பவர். 950 (தொளாயிரத்தைம்பது) வருடகாலம் இருந்தி ருப்பதாய்க் காணக்கிடக்கின்றது. தசரத சக்ரவர்த்தி 60000 (அறுபதுநாயிரம்) வருடங்கள் உயிருடனிருந்ததாய் இராமா யணம் தெரிந்த ஒவ்வொருவரும் அறிவர்.

தாமஸ் பார் என்ற ஆங்கிலேயர் 88 (எண்பத்தெட்டாவது, வயதில் முதல் தாரம் மணம் செய்துகொண்டபின் மீண்டும் 120 (நூற்றிருபதாவது) வயதில் இரண்டாவதுமுறை கலியாணஞ் செய்து கொண்டிருக்கிறார். 145 (நூற்றுநாற்பத்தைந்தாவது) பிராயத்தில் பந்தயங்களுக்குச் செல்லவும், சிரமயான காரியங்

களைச் செய்யவும் சாத்தியப்பட்டது. அவரது ஜீவிய வருடங்கள் 152 (நூற்றைம்பத்திரண்டு.) அவர் சாதாரணமான உணவுகளையே உட்கொள்வது வழக்கம். மிகவும் எளிய வாழ்க்கையையே அவர் உடைத்திருந்தார். அவரது வாழ்க்கை நம் ஒவ்வொருவருக்கும் படிப்பினையாக இருத்தல் வேண்டும்.

மாயூரத்திற் கருகிலுள்ள ஓர் கிராமத்தில் அந்தணரொருவரிருக்கிறார். அவர் காலையில் நான்கு மணிக்கே எழுந்து, தனது காரியங்களை நேர்மையுடன் முடித்துக்கொண்டு இரவு பத்து மணிக்குத் தான் நித்திரைக்குச் செல்வது வழக்கம். அவரது தேகவலிமையையும், ஆரோக்கியத்தையும் சுருசுருப்பையுங் கண்டு நம்சிறுவர்கள் கண்டு வெட்கப்படவேண்டியிருக்கும். இப்பொழுதுகூட நம் தந்தை, பாட்டனார் முதலியவர்கள் 30 (முப்பது) மைல்கள் உள்ள தூரத்திற்குச் சென்று செவ்வனே யாவற்றையும் முடித்துக்கொண்டு அதேபகலிலோ அல்லது இரவிலோ திரும்பிவிடுகிறார்கள். நம்மவர்களில் எத்தனை வாலிபர்களுக்கு அவ்விதம் செய்தல் கூடும்?

திமிங்கலம் 1000 (ஆயிரம்) வருடங்களும், கழுகு 100 (நூறு) வருடங்களும், ஆமை 100 (நூறு) வருடங்களும், யானை 350 (முன்னூற்றைம்பது) வருடங்களும், எறும்பு 10 (பத்து) வருடங்களும், மீன் 70 (எழுபதுமுதல் எண்பது வருடங்களும்) இருந்திருப்பதாய்க் கணக்கெடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் மனிதனோ எவ்வளவுகாலம் உயிருடனிருக்கிறான்? இந்தியாவில் மரணவிகிதம் நூற்றுக்கு 30 (முப்பது) பேர்: இங்கிலாந்தில் 14 (பதினான்கு) பேர்: கனடாவிலும் 14 (பதினான்கு) பேர்.

வாழ்க்கையில் இன்பம் பயப்பது நோயின்மையேயாகும். ஏனைய இன்பங்கள்யாவும் தானே முளைக்கும். திடகாத்திரம் சோம்பலின்மை, உற்சாகம் முதலிய வற்றை உடையவர்களுக்கே. எக்காரியமும் சித்திபெறுகின்றது. இம்மூன்றுமில்லாதவன் நான் வாலிபன் எனச்சொல்லிக்கொள்வதில் பிரயோஜனம் யாது? அவை அவனது நல் வாழ்க்கைக்கு ஓர் இடையூ

ராகும்: இகழ்ச்சி பெருகும் : துன்பம் மலிவுறும் : பின் எக் காரியமும் நடைபெறுதொழியும்.

1500 (ஆயிரத்தைந்நூறு) ரூபாய் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்த ஒருவர், அவருக்கிருந்த வியாதியினால் வேலையி னின்று நீங்கும்படி நேரிட்டது. அவருக்கந்தநோய் இருபதா வது வயதில் உண்டாகியது. தன்னுடைய நாற்பதாவது வயது வரையில் அப்பிணியை நீக்கிக்கொள்ளாமல் அசட்டை யாய் இருந்தமையினால், அந்நோய் அதிகமாகி அவஸ்தையுற்று வேலையினின்று வியாதியை நீக்கிக்கொள்வதற்காக சிறிது காலம் ஓய்வு எடுத்துக்கொள்ள நேரிட்டது. எனினும், அவர் 60 [அறுபது] வயது வரையில் உயிருடனிருந் தும் மீண்டும் வேலைக்குத் திரும்பவேயில்லை. அக்காலத்தில் அவருக்கு 5000 (ஐயாயிரம்) ரூபாய் சம்பளம் கிடைத் திருக்கும்.

பிர்மஞ்ஞான சங்கத்தைச்சேர்ந்த அனிபெசன்டம்மையார் தன்னுடைய 80 (எண்பதாவது) வயதில் தின தினே நாளொ ன்றுக்குத் தொடர்ச்சியாக 18மணி நேரத்திற்கதிகமாக வேலை செய்திருக்கிறு ரெனச் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

(தொடரும்)

தி. சு. மகாலிங்கம்.

# தாய்மொழியை வளர்த்தல்.

(68-வது பக்கத்தொடர்ச்சி.)

## வளர்த்தல்

இந்நிலையில் நிலம் கடலாகவும், கடல் மலையாகவும், கண்ட பழமைவாய்ந்ததும், ' அயலாய்உள்ளவர்களுக்கும் பொ ருளை விளக்கக் கூடிய இயற்கை ஒலி' களைப் பெற்றிருப்பதும், வேறு பல சிறப்புக்களையுடையதும் ஆகிய நுமது மொழி, என் தாழ்ந்த நிலைமையை அடைதல் வேண்டும் ? " என்று ஒரு

சிலர் குறிப்பாகவினவலாம். அங்ஙனம் வினவப்படின் அவர்க்கு "இத்தகைய பழமையும் மேன்மையும் வாய்ந்த ஒரு மொழி தனது இயற்கையான் உயர்ந்த நிலைமையிலிருந்து தற்பொழுது தாழ்ந்த நிலைமைக்கு வந்திருப்பது வியப்பே! எனினும், அஃது உலகத்தியற்கை; அன்றியும் அது (நமது மொழி) சில நூற்றுண்டுகளாக—ஏன் பல நூற்றுண்டுகளென்றே சொல்லப்படலாம்—காலவேறுபாட்டாலும், அரசுமாற்றம் முதலிய பல மாறுபாடுகளாலும் இத்தகைய நிலைமைக்கு வந்துளது; அதனால் அக்குறையை நமது மொழியின்மேல் ஏற்றமுடியாது; ஆனால் அது இத்துணைகாலம் காப்பார் அற்று இருந்தும இன்னும உயிருள்ள, உலகவழக்கிலுள்ள, பேசுமொழியாகஇருப்பதே அதன் மிக உயரிய மேன்மையினை வலியுறுத்துவதாகும்" எனக் கூறலாம். நிற்க, பிணத்துக்கு அலங்காரம் பண்ணுவதுபோல் எவரும தமது பழையபெருமையைச் சொல்லிக் கொள்வதால் அன்னார்க்கு வரக்கூடிய நன்மை ஏதும் இன்று; அஃது அறிவுடையோரது பெருநகைப்புக்கே இடனாகும்; அன்றியும், அது மடியாளர்செய்கையுமாம். ஆதலின், நாம் நமதுமொழியை எங்ஙனம் வளர்த்தல் வேண்டும் என்பதை ஆராய்ந்து இனிது பயன் பெறும்வரையில் அத்துறையில் இடைவிடாது ஊக்கத்துடன் முயலவேண்டுவதே நமது முதற்கடமையாகும். ஒருவர் ஒன்றனை வளர்க்க முன்வந்தால் அன்னார்முதலில் அதன்கண்ணுள்ள குறைபாட்டைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். குறை-இன்றியமையாமை. இம்முறையில் அடுத்தபடியாகக் கூறவேண்டியது நமது மொழியின் இன்றியமையாமைக்குத் தடையாக இருக்கும் குறைபாடுகளையே. முற்கூறியாங்குக் காலவேறுபாடு முதலியவற்றால் நமது தற்கால உலகவாழ்க்கைக்கு வேண்டுவன முன்னினும் பலவாகப் பெருகிவிட்டன.

(தொடரும்)

ஊ. சா. வேங்கடராமையர்.

# தொண்டைமான் இளந்திரையன்.

(93வது பக்கத்தொடர்ச்சி.)

நாகலோகத்தரசனாகிய ஆதிசேடன் தனக்குப்பன்னாள் மகப்பேறின்மையால் மிகவருந்திமுடிவில் சிவார்ச்சனையினால் என்குறை முடிப்பேனென்றுறுதிகொண்டு, தன்னருமை மனைவியுடன் தன்னுலகத்தைவிட்டு நீங்கிப் பூலோகத்தே வந்துசேர்ந்தான். வந்து வசிட்டமுநிவரைத் தரிசித்துத் தன் குறையை அம்முநிபுங்கவரிடம் விண்ணப்பித்துக்கொண்டு ஓர் நன்மகவை யடையும் உபாயத்தையும் தனக்குஅருள்புரியுமாறு இரந்தான். அதற்கு அம்முநிவர் அன்னவனிடம் கருணைபுரிந்து அவனை நோக்கி 'இறையே:எந்நோன்பினு நன்னோன்பாய் யாங்கண்டது சிவபூசை ஒன்றுமே. ஆதலின் நீஅதைப்புரியின் நின்குறை தீரும்' எனக்கூறித் தமதிருக்கை சேர்ந்தார். சேடனும் அவ்வாறே செய்வனென மனத்திற்கொண்டு அருந்ததியையொக்கும் தன் இல்லாளுடன் கும்பகோணத் திருநகரையடைந்து அந்நகரின் கீழ்க் கோட்டத்தே எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானைக்கண்டு வணங்கி ஆண்டுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அப்பெருமானை அத்தியந்த அன்புடன் பூஜைசெய்தான். இன்னவாறாக உரகவேந்தன் பன்னாள் அர்ச்சித்து வந்தும் தன் கருத்து முற்றுப்பெறாதது கண்டு அவணின்றும் நீங்கிச் சண்பகாரணியஞ் சேர்ந்து ஆண்டு எழுந்தருளியிருக்கும் தற்பரவிலிங்கத்தைக்கண்டு வணங்கி, அங்கோர் தடாகத்தில் மூழ்கிச் சிவபெருமானை அன்புடன் பூசித்து வந்தான். இவ்வாறு பன்னாட்பூஜை புரிந்தும் தன் குறைதீராமையால் ஆண்டுநின்றும் பாம்புரத்தே போந்து அவணோரிடத்துள்ள சிவலிங்கத்தைக் கண்டு, புண்ணிய தீர்த்தமாடி மிக்க அன்போடும் பூசித்து வந்தான். ஈண்டும் சிவபெருமான் அருள்புரியாமைகண்டு அராக்குலத்து வேந்தன் மனம் புழுங்கி அப்பாம்புரத்தை அரிதின்னீங்கித் திருநாகைக் காரோணத்தை யடைந்து ஆலயம்

புக்குப் 'பழிதபு கருந்தடங் கட்பாவையோர் பாகத் தெம்மானைத் தரிசித்துக் கழிபேருவகை கொண்டு அத்தலத்தின் மேற்றிசையில் பொருந்திய சருவ தீர்த்தத்தில் நீராடி அத்தீர்த்தத்தின் மேற்றிசையில் சிற்பநூல் விதிப்படி ஆலயம் ஒன்று தாபித்து ஓர் சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து, காலையில் குடந்தைமேய கடவுளைக் கருதியும், உச்சிப் போதில் சண்பகக்காட்டண்ணலை விரும்பியும், மாலையில் பாம்புரத்துறையும் வள்ளலை நினைத்தும், அர்த்தயாமத்தில் காரோணப் பெருமானைக் கனிவுடன் துதித்தும், இவ்வாறு நாடோறும் உள்ளன்போடு பூஜித்து வருவானானான். புயங்கவேந்தன் இவ்வாறு பூஜை புரிந்துவர, ஈசைபங்குடையவெம்மானின்னருளினால் அன்னான்தேவி கருப்புற்றாள். அதன்பின் நாற்றலத்தும் நாற்காலத்தும் பூசித்து விடைபெற்றுக் கொண்டு அருமையிற் பிரிந்து தன் இல்லக் கிழத்தியோடு வேந்தன் தன் இருக்கைபுக்கான். ஆண்டுத்திங்கள் பத்துச் செல்ல ஓர் சுபதினத்தில் சேடன் பன்னி திருமலையொத்த பேரெழில் வாய்ந்த ஓர் பெண்மகவை யீன்றாள். அத்தகைய மகவுக்கு முலைகள் மூன்றிருப்பக்கண்டு அரசனும் அரசியும் நனிபெருந் துன்புற்றுக் கவலைக் கடலிற்றோய்ந்தார்கள். அவ்வமயம் காரோணப்பெருமான் அருளால் 'நீங்கள் கவலையொழிக; மூன்று தனங்களையுடைய இம்மகவைக் காரோணங் கொண்டுய்த்துக் கருந்தடங்கண்ணியைப் பூஜை செய்யச் செய்யின் சருவபுட்கரணி தீர்த்தத்தின் பக்கலில் ஓர் புரவலன் வருவான். அவனைக்காணின் இம்முலைகளில் ஒன்று மறையும், என அசரீரி கூற, கிழவனுங் கிழத்தியும் ஆனந்த முற்றுத் தமதருமைப்புதல்வியைக் காரோணங் கொண்டு போந்து ஆண்டுச் சில சேடியரை உடனிருத்திச் சிவ பூஜை செய்யச் செய்து, தாம் தமதுலகம் மீண்டனர். புதல்வியும் அன்புடன் கருந்தடங்கண்ணியை முறைப்படி பூசித்து வந்தாள். ஓர் தினம் வழக்கப்படி அவள் ஈசையைத் துதியுடன் பூசித்து நிற்குமளவில், அந்நகரில் ஆட்சிபுரிந்துவரும் இரவிகுலத்துதித்தச் சாலீசுகனென்னும் சோழபூபதி அத்தீர்த்தக் கரையிற்றோன்றினான். தோன்றிய குமரவேளனையான் அவ்வணங்கைக்கண்டு அவள்மேற்காத

ல்கொண்டு அவளை மணக்கக் கருதிக் காமவிரகத்தால் மிகவும் வருந்தி நின்றான். அப்பெண்மணியும் இவ்வாடவனைக் கண்டவளவில், தனதிருமுது குரவர்கூறியபடித்தன்முலைகளிலொன்று மறையக்கண்டு, நாணமுற்று இங்கு நடந்தமையைத் தன் பெற்றோரிடந் தெரிவிக்க வெண்ணித் தன் தோழியருடன்விரைவில் மறைந்தனள். வேந்தனும் நின்றவளைக்காணுது மனம்மாழாந்து ஆலயம் புகுந்துப்பெருமானை வணங்கி நிற்ப, பெருமான் 'வருந்தேல்! நஞ்சவுந்தரப்பெருமாளிடஞ் செல்லுதி', யென்று ஆக்ஞாபித்தார். அவ்வாறே மன்னன் செல்ல அத்திருமால் அரையனை விளித்து 'நீ கவலேல் நீ கண்டவள் நாகலோகத் தாசன் புதல்வி. இங்கிருந்து அரைக்குரோச தூரத்தில் ஓர் பிலமொன்றுண்டு. அது நாகலோகஞ் செல்லுவதற்கு ஓர் வழியாகும். அதன் வழியே நீ செல்லின் நாகலோகத்திறை நின்னை எதிர்கொண்டு சென்று, தன்மகனை நினக்கே மணஞ் செய்விப்பன்' எனக்கூறினர். (தொடரும்)

---

# நம்மாழ்வாரவரதுதிருச்சீர்த்தொடை

(94-வது பக்கத்தொடர்ச்சி)

## ஆழ்வாரது காலம்.

ஒருவரியற்றிய நூலும், அந்நூல்நுதலியபொருளும், அப்பொருளையுணர்த்துஞ்சொல்லிலும் பயன் தருவனபோல், அவர் இருந்தகாலம் அத்துணைப்பயன் தராது. எனினும் நூல் கேட்டற்கு நமது கருத்து எழுதல்வேண்டி நூற்பாயிரங்கேட்டலும் ஒருபுடை அமையும். அப்பாயிரம் பொதுச்சிறப்பென விருபாற்பட்டுச் சிறப்பு எட்டும் மூன்றும் ஆகப்பதினொன்றும். அம்மூன்றுகாலங்கள் காரணமாவன. காலத்தின் முற்பிற்பாட்டால் நூற்குப் பெருமை சிறுமை யெய்தா. நூலின் தொன்மையா

லேற்றமும் புதுமையாற் ருழ்வும் நூற்பொருளுக்கேனு மாசிரியர்க்கேனு முளவாக. நூலிற் கூறப்படுஞ் செம்பொருளே சிறப்பைத் தருவது. ஆழ்வார்காலத்தைக்குறிக்கும் நூல்கள் அன்னுர்காலத்துக்குப்பின் வரையப்பட்டு,ஒன்றுபோலொன்று கூறுமையின்,திடப்பிரமாண மாகா என்றுரைப்பார் சிலர். எனினும் அந்நூலாற்முல் நமது முதியோர்கள் 'ஆழ்வார்கலியுகம் பிறந்தபின் முந்நூற்றுப்புலவர் சங்ககாலத்துப்பிறந்தாரென்று கர்ணபரம்பரையில் வழங்கிவந்ததனை நாங்கேட்டு நம்பின்னடியார்க்குச் சொல்லுகின்றோம்.

ஆழ்வார்கலி சஙுoஉ-ம் நாள் பகுதானிய வருஷம் பிறந்தாரென்று சிலர் கூறுவது யுகசந்திதேவமானம், கற்பபேதம், கலியின் சுத்ததினம், கர்ப்பப்பிரவேச மாதிய சிலகாரணம் பற்றி யென்க. இதற்கு மாறுக எவர் எதனைக் கூறினும் அதனைச் செவியாறக் கேட்டொழுக விடுவதேயன்றி, உள்ளூறக்கொண்டு அஃதுண்மையெனக் கண்டு பழங்கொள்கையையொழித்தார் இதுகாறுமொருவருமிலர். ஒழிக்கப்புகுந்தாருமொருவரோடொருவ முரண்படுவர். ஓரிலக்கேசென்ருரொவருமிலர். அறிஞர் பலருமோர் முடிவுக்கு வருந்தனையுமதனையாம் பற்றியிருத்தலிற்சிறிதுந்தவறிலது. இனிச் சிலபெரியார்:—'பிற்காலத்த பாவினங்களாலாழ்வரர் செய்யுட் செய்திருக்கின்ருர், அவர் சொன்னடையும் பொருணடையும் அப்பிற்காலத்தன' என்றும் சில அறிஞர்.—'பொலிக பொலிக' என்னும் திருவாய்மொழி ரு-ம் பத்து 2வ்து திருவாய்மொழியும், அதில் 'மேவித்தொழுது' என்ற பாசுரமும், 'மேவித்தொழும் அடியாரும் பகவருமிக்க துலகே' என்ற அதனீற்றடியும் சடகோபர் தங்காலத்து இருந்த பெரியாழ்வாரைப் பெயர் கூருது குணங்கூறிச்சுட்டியுள்ளார் என்பதைவிளக்கும்' என்றும் சில கலைஞர் சைனர், பௌத்தராதியர் சமயப்போர் புரிந்தகாலம் சகம் கூ-ம் நூற்ருண்டு அக்காலத்துத்தான் ஆழ்வார் இருந்திருத்தல் வேண்டும் என்றும், சில விசாரதர்:— பல்லவர்கள் செழித்திருந்த சகம் ரு-ம் நூற்ருண்டினர் திருமழிசை ஆழ்வார், இவர்க்குப்

பின் நம்மாழ்வார் மதுரகவியாழ்வார் பராங்குசதாசர் நார் நாத முனிகள் இந்நால்வருஞ் சமகாலத்துவராதல்வேண்டும்என்றும், சில புலவர்.— நம்மாழ்வார் திருமங்கையாழ்வாருக்கும் மற்றை யாழ்வார்களுக்கும் சற்று முற்பிற்பட்டவர் என்றும், சில மே தாவிகள் ஜடிலவர்மன் முதல் மாறன் சடையன் வேலங்குடிப் பழம் பெயரைநீக்கி ஸ்ரீ வரமங்கலம் என்று புதுப்பெயரிட்டு சுஜ்ஜனப்பட்டருக்குத் தானஞ் செய்தானென்று வரைந்துள்ள சாசனம் ஒன்றிற்கண்ட மாறனென்பாரே இம்மாறர் ஸ்ரீவ ரங்கலமே சீவரமங்கைவானமாமலை தோதாத்திரி நாங்கூனேரி என்னும் திவ்யதேசம். இம்மாறன் சடையன் கலி வருடம் ௩அஎக-ல் இருந்தவனென்பது ஆனைமலைச்சாசனத்தால் விளங் கும் இச்சீவரமங்கலம் சீவரமங்கையெனவும், குரங்குடி திருக்கு றுங்குடியெனவும் மாறுதற்குச் சிலகாலம் சென்றிருக்கும், இதன் பின்னரே ஆழ்வார் இத்திவ்ய தேசத்தைப்பாடியிருப் பார், ஆதலின் ஆழ்வார் சகம் அஏஉ ற்கும் கூஉஉ ற்கும் இடை பட்ட காலத்தாராதல் வேண்டும் என்றும், சில கணித நூல் வல்லார் பஞ்சாங்கங்களையுங் கணித்து 'ஆழ்வார் இவ்விடைப் பட்ட காலத்தினரே' யென்றுமுரைப்பார். [அநுபந்தம் 2] ஆழ்வார்காலத்து அவரின்மிக்காரும் ஒப்பாரு மொருவருமிலர் என்பது திண்ணம். இவ்வாறு காலஆராய்ச்சி செய்வது சரித்திராசிரியர்களுக்கே பயன்படும். சமயிகளுக்குப் பெரி யோர்களது திருநக்ஷத்திரங்களே அவர்களை ஆசிரயித்தற்கும் அநுகாரஞ் செய்தற்கும், திருநாளைக்கொண்டாடுதற்கும், அவ ற்றால் நற்பேறு பெறுதற்கும் ஆவசியகமாதலின்,இப்பெரியோ ரது திருநாளை நாம் முற்படவெண்ணி, உபதேசரத்தினமாலை யிற் போல, 'ஏரார் வைகாசி விசாகத்தினேற்றத்தைப்-பாரோ ரறியப் பகர்கின்றேன். 'உண்டோ வைகாசி விசாகத்துக் கொப்பொருநாள், என்று புகழ்ந்து பாடுவோம்.

(தொடரும்)

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை.

# " சிவப்பிரகாசன் "
# தாசி மோகனம்

(95-ம் பக்கத்தொடர்ச்சி)

(ஜெக) அப்படியே செய்கிறேன், என விடைபெற்றுக் கொண்டு, அழகிய வல்லி வீட்டிற்குவந்து, சிவப்பிரகாசம் பிள்ளையால் அன்புடன் கொடுத்த உணவுப் பொருள்கள் யாவையும் எதிரில் வைத்து அவர் சொல்லிய யாவையும் சொன்னான். இதை யறிந்த அழகிய வல்லி, ஜெகதாம்பாளிருவரும் பிள்ளையவர்களது சாமர்த்திய குணத்தைமெச்சி இன்றே எவ்விதத்தினாலும் வசப்படுத்தி வரவேண்டும். அதனால் பெருத்தலாபம், என தமக்குள் முடிவு செய்து கொண்டவர்களாய், மேலும், வந்தபலகாரங்களை உண்டு, ஆடை ஆபரணங்களினால், தங்களை அலங்கரித்துக் கொண்டு மோஹனத்திற்கு ஏதோ சில உபதேசங்களைச் சொல்லிக்கூட அழைத்துக் கலியாண வீட்டை நாடி வந்தார்கள். அவர்கள் வெகு தளுக்கு மினுக்குடனும் உய்யார நடையுடனும் வருவதைக் கண்ட சிவப்பிரகாசம் பிள்ளைக்கு உண்டான சந்தோஷத்தையும், அவர் அச்சமயம் அனுபவித்த இன்பத்தையும் அவரவரே அறிவீர்களெனவே நம்புகிறோம். இவ்வாறிருக்கும் சமயத்தில், வந்தவர்கள் யாவரும் பிள்ளை வீட்டிற்கு வரவே, அவர் தன்வயமற்று பரவசராகி வந்தவர்களை உட்காருங்கள்! உட்காருங்கள்!! என்றார். வரும்போது சொல்லிக் கொடுத்திருந்தபடியே மோகனம் புன்சிரிப்புடையவளாய், நமஸ்காரஞ் செய்து பக்கத்தில் நின்றாள். அது சமயம் ஜெகதாம்பாள் எதிரே வந்து, இன்றைய தினம் சுபதினமாயிருப்பதால், மோகனத்தின் கையினால், (அப்துல் ரஹிமான் சாஹிப்பின் அத்தர் கடையில் வாங்கிவந்த வாசனை சீவல்வகையருவோடு பரிமளச் சுண்ணும்பு இட்ட துளிர் வெற்றிலை) தாம்பூலத்தை வாக்கிக் கொள்ள வேண்டு மென்றும், இன்று போல் என்றும் நீங்காத அன்யோன்யமான சிநேக பாவத்தில் வாழ்ந்து வரவேண்டுமென்றும் வெகு வினயமாய் உரைத்து நின்றாள்.

(சிவ) அம்மா!! நீங்கள் மனமொப்பிச் சொன்ன வாக்குப் பழுது போகாது நானும் அவ்வாறே நடந்து கொள்ளுகிறேன். என்று சொல்லி, தாம்பூலத்தை வாங்கிக் கொண்டார்.

அழகிய வல்லி, அதுபோழ்து தமது தாயாராகிய ஜெக தாம்பாளை அழைத்துத் தங்கச்சியும் அவுங்களும் பார்த்துக் கொள்ளுகிற பார்வையும், கண் ஜாடையையும் பார்த்தையா? என்றாள்.

(ஜெக) எப்படியாவது, அவுங்க இருவரும் சந்தோஷமாக இருப்பதைப் பார்ப்பதுதானே பெரும் புண்ணியம். கடவுளும் அவ்வாறே அருள்புரிய வேண்டுகிறேன். பின், உலக வழக்கம் போல், கிழவியாகிய என்னை வெறுத்துவிடாதீர்கள் என்றாள்.

(சிவ) அடடா!! ஏதேது, இப்போதே இப்படிக்கெல்லாம் சொல்ல ஆரம்பித்து விட்டிங்க அதுவோ சிறுசு! அதுக்கு என்ன தெரியும்! சிரிக்கும்! ஓர் விதப் பார்வையும பார்க்கும்! அஃதெல்லாம் ஓர் கணக்கா என்றார். இவ்வாறு விளையாட்டாகப்பேசி, பிள்ளையைத்தங்கள்வலையிற் சிக்கும்படிச்செய்து கொண்டிருக்கையில், காலைப்பவனி ஊர்வலம் புறப்பட்டதால், எல்லோரும் அதற்குச் சென்றார்கள். ஊர்வலமாகி வந்தவுடன் கூட்டமத்தியிலிருந்த போதிலும், இவர்கள் பேரிலேயே பார்வையையும் மனதையும செலுத்தி யிருக்கும சிவப்பிரகாசனுக்குக் கண் ஜாடை காட்டிக் கூட வீட்டுக்கு வரும்படி அழகிய வல்லி அறிவித்தாள். இவரும அதேமாதிரி மாலை வருவதாய்க் குறிப்பிட்டார். (தொடரும்)

S.T. விகடம்.

---

## தமிழ்க் கலாசாலைகள்.

திருக்கைலாயப் பாம்பரைத் தருமபுரம் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பண்டாரசன்னதி அவர்களால் இவ்வருண்டு நிகழ்ந்த ஆவணி மாதம் 31உ முதல் 'மாணிக்கவாசக பாடசாலை' என்றும் ' சித்தாந்த ஞானப்பிரகாச வித்யாசாலை ' என்றும் இரண்டு பாடசாலைகள் நியமித்து, மாணிக்கவாசக பாடசாலையில் இளமாணவர்களுக்கு நன்னெறியைத் தரத்தக்க அரிய நூல்களைப் பாட புத்தகங்களாயும், சித்தாந்த ஞானப்பிரகாச வித்யாசாலையில் சித்தாந்த பாடங்களைப் போதிக்கவல்ல ஆசிரியரையும் நியமித்து பல பிள்ளைகளையும் எதிர்பார்ப்பதாய் பத்திரிகை வாயிலாக அறிகிறோம். மேலும் சில பிள்ளைகள் படிப்பதாகவும அவர்களின் பாடங்களை ஆதீன கர்த்தரவர்களால் அடிக்கடி பரீக்ஷை செய்து வருவதாயும் தெரிகிறது. அதிக மாணவர்கள் சேருவதற்கான தக்க வசதிகளை ஏற்படுத்தி ஆதரித்து வருவார்களாக. சுபம் !

## அறிவிப்பு.

நம் "குணநிதி" என்றும் மேலோங்கி விருத்தியுற்றுவரவேண்டுமென்பதை நாடிய திருக்கைலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் அவர்களும் திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசிசுவாமிகள் அவர்களும் போஷகர்களாகி தமிழின் வளர்ச்சியை மேற்கொண்டு நமக் ஊக்கமளித்தப்பெருங்கருணையை எவரும் என்றும் பாராட்டற்பாலதே!

# மதிப்புரை

## "உலகரகசியம்"

இந்நூல் ஒன்று, நாச்சியார்கோவில் இந்திரவிலாஸ், ஸ்ரீமான் தி. கோ. கிருஷ்ணஸாமிபிள்ளை அவர்களிடமிருந்து வரப்பெற்ருேம். இதை ஆதியோடந்தம் பார்வையிட்டதில், உலகவாழ்க்கையை தற்கால நாகரிகத்தில் செலுத்திப்பல இன்னல்களுக்காளாகி, அதன் உண்மையையுணராது மதிமயங்கும் பலருக்குமாகும்படியான அரிய ஆராய்ச்சிபூர்வமான பலவிஷயங்கள்படிப்பவர் மனதைக் கவரத்தக்க இனிய தமிழ்நடையில் பாக்கக் காணக்கிடக்கின்றன. மேலும், இடையிடையே, பல பெரியார் அனுபவஞானத்தால் எழுதிய அரிய வியாசங்களும், வைத்தியக் குறிப்புகளும், விசேஷக்குறிப்புகளும், விநோதக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்நூலாசிரியரால் பல நூல்களும் வெளிவந்துள்ளன. அவைகளின் விபரம் ஷையாரினுல் வெளியிட்டிருக்கும் விபரவிலைப்பட்டியலிலிருந்து அறியலாம், மிக அழகாய் சிறிய அளவில் எப்போதும் பார்ப்போர் மனதைக்கவரத்தக்கவாறு அச்சிட்டிருக்கிறது. இந்நூலை உலகோர் வாசித்தறிந்து உண்மையுணர்ந்து இன்புறுதல் அவசியமாகும். இதன் விலை ரூபாய் ஒன்றே. இதன் ஆசிரியபால் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## "அன்னதான தர்ம மோக்ஷ சாகரம்"

இந்நூல் ஒன்று வரப் பார்வையிட்டோம். இதில் தர்மங்கள் பலவற்றுள் அன்னதானமே மேலானது என்பதைக் குறிக்கும் இதிகாச புராணங்களிலுள்ள செய்யுள்களையெல்லாம் ஆராய்ச்சிசெய்து, ஒருங்கேசேர்த்து உலகோர்க்கு உபகாரமாய் திருநாகேசுவரம் அண்ணாமலையார் மடம் ஸ்ரீ ஷண்முகானந்தசுவாமி அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் கிரயம் 0—8—0 மேலும் இதனுல் வரும் ஊதியத்தை அன்னதானமே செய்துவருவதாகவும், இதை விலைக்குவாங்கி வாசிப்போர் அன்னதான தருமத்திற்கும் பாத்திரராவார் என்பதையும் குறிப்பிட்டிருக்கிருர்கள். வேண்டுவோர் இயற்றியவருக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

# பரிமளப் பொக்கிஷம்.

எது?

கும்பகோணம் பெரியகடைவீதி

## K. அப்துல்ரஹிமான் சாஹிப்&சன்ஸ்

## பரிமளச் சாலை.

1 சந்தனாதித்தைலம்.
2 அரைக்கீரை விதைத்தைலம்.
3 மணமிகுவீசும் பத்திகள்.
4 புனுகு ஜவ்வாதுகள்.
5 பஞ்சவர்ணபக்குவக்கொப்பரைச்
6 சற்குண ஸ்நானப்பொடி. [சீவல்.
7 சந்தன வில்லைகள்.
8 சித்தர்விரும்பும்அத்தர்தினுசுகள்
9 வாசவர் மெச்சும் கேசர்பவுடர்.
10 பரிமள பாக்குத்தூள்.
11 பரிமள வில்லைகள்.
12 மணமிகு அரகஜா.
13 சுகந்த சந்தனப்பவுடர்.
14 பரிமளச் சுண்ணாம்பு.
15 நற்குண பற்பொடி.
16 ஈசனுக்குரிய தசாங்கம்.
17 ரோஜாப்பு குல்கந்து.
18 சரிமண நறுமண கலவைச் சந்தனம்.


நமது பரிமளச்சாலையில் ஷை வாஸனாதிரவியங்கள் நம் முன்னோர்களின் அனுபவ முறைப்படி தயார் செய்து வழங்கிவருவது யாவரும் உணர்ந்ததே. நம் வியாபாரப் பெருமையும் சாமான்களின் உயர்வும் அரசர் முதல் யாவராலும் அங்கீகரித்து உபயோகப்படுத்தி வருவதென்பது ஒருமுறை வாங்கியவர்களுக்கே தெரியும். இவை முனிச்சிரேஷ்டர்களான ஷேக்பரீத், சக்கர கஞ்ச் அவுலியா அவர்களால் செய்யப்பட்ட உயர்ந்தமுறையாகும். தஞ்சை அரசருக்கும், டில்லி சக்கிரவர்த்திகளுக்கும் எங்களது முன்னோர்களால் பரிமளப் பொருள்கள் செய்து கொடுக்கப்பட்டுவந்தன. தற்காலத்தும் நாமே பலவிடங்களுக்கும் பரிமளஸாமான்கள் செய்துகொடுத்து நற்கியாதியும் பெற்றிருக்கிறோம் விலையும் சரசம். (விலை ஜாபிதா இனாம்)

தங்களது ஆர்டரை எதிர்பார்க்கும்:—

**K. ABDUL RAHIMAN SAHIB & SONS.,**
**Attar Merchants,**
**KUMBAKONAM.**

# மிகவும் மலிவானதும் சௌகரியமானதுமான நெல்மெஷின் ஸெட்டுகள்.

சிறிய கிராமங்களுக்கு உதவக்கூடியவை.



12குதிரை கிரோஸின் என்ஜினும் 7-நெ. ஹல்லுரும் அடங்கிய ஸெட்டு. மணி 1க்கு 15கலம் முதல் 20-கலம் வரையில் அரைக்கின்றது. பெல்டு பவுண்டேஷன் போல்டுகள் முடிய சகலமும் உள்பட

விலை ரூ. 3250 0 0

இந்த விலையில் 10 பர்சண்டு வரையில் கமிஷன் கொடுக்கின்றோம். மேலும் இந்தத்தொகையில் பாதியைக்கடனாகவும் கொடுத்து உதவிபுரிகிறோம். கடன் தொகையை மிகச் சுலபமாக மாதாமாதம் கொடுத்து எளிதில் அடைத்துவிடலாம். அநேகர் இவ்விதம் சகாயம் எங்களிடம் பெற்றிருக்கிறார்கள்.

காட்லாக்குக்கு உடனே எழுதுங்கள். இம்மாதிரியான என்ஜின்கள் இவ்விடங்களில் அநேகம் வேலை செய்வதை நேரில் பார்க்கலாம்.

கௌதமன் அண்டு கம்பெனி,

**திருவிடைமருதூர்,** தென் இந்தியா.